**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 19.09.2025**

**E.A.No.23/2019**

**in**

**EP. No.17/2017**

**வழக்கு சாட்சி PW.1– தவச்செல்வி, க/பெ. கலியப்பெருமாள்**

**<u>2 மற்றும் 3–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

அசல் வழக்கு எண் .53/2012 என்ற வழக்கின் தீர்ப்பின் விபரம் தாவா சொத்திற்கு நிறைவேற்றுதல் மனு தொடர்பாக அமீனா வந்தபோதுதான் தெரியும். நான் 56 சென்ட் நிலம் கிரையம் வாங்கினேன் . நான் பவர் முகவர் மூலமாகத்தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான், முகவருக்கு அதிகாரம் வழங்கிய ஆவணம் சட்டமுறைப்படி நிலையாக ஊர்ஜிதத்தில் உள்ளதா என கண்டறிந்துதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

நான் கிரையம் வாங்கியபோது தாவா சொத்து தரிசு நிலமாகத்தான் இருந்தது. கிரையம் வாங்கும் முன்பே நான் தாவா சொத்து நிலத்தில் விவசாயம் செய்து வந்தேன் என்றால் சரிதான் . எங்களுக்கு தெரியாமல் எங்கள் சொத்தில் தீர்ப்பு ஏற்பட்டுள்ளதால் அதை ரத்து செய்யச்சொல்லி நிறைவேற்றுதல் மனுவில் இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டது . ராஜூ, ஸ்ரீராமை ஏன் இந்த மனுவில் எதிர்தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் அமீனா வந்த பயத்தில் அவர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்தோம்.

1ம் எதிர்மனுதாரரான சங்கர் என்மீது வழக்கு எதுவும் தொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் என்மீது வழக்கு எதுவும் தொடுத்துள்ளார்களா என்றால் இல்லை.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.09.19 03:14:44 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.